# வெற்றிக்கு அச்சாரமாக விழாக்கோலமான விழுப்புரம்

## உங்களில் ஒருவன்... முதல் பக்கத் தொடர்ச்சி

கருத்துகளை அறிந்துகொண்டு, அவர்களின் செயல்பாடுகளை மினிட் புத்தகங்கள் வாயிலாக ஆய்வு செய்தேன். நாடாளுமன்றத் தேர்தல் களத்திலும் அதற்கு முந்தைய தேர்தல்களிலும் எந்தெந்தப் பகுதிகளில் கழகத்திற்கு அதிகளவில் வாக்குகள் கிடைத்துள்ளன, எங்கெங்கே இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அவர்களிடம் விளக்கினேன். கழகத்தின் சார்பில் அதிகளவில் கூட்டங்கள், நிகழ்ச்சிகள், மக்களுடனான செயல்பாடுகளை மேற்கொண்ட நகர - ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்ததுடன், செயல்பாடுகள் சற்று குறைவாக இருந்த நிர்வாகிகளுக்குக் கூடுதல் ஊக்கம் அளிக்கும் வகையில் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டேன்.

ஜனவரி 28 அன்று விழுப்புரத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழாவும் மணிமண்டபங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வும் இருந்தன. **விழுப்புரம் மாவட்ட விழா ஏற்பாடுகளை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி மிகச் சிறப்பாகச் செய்திருந்தார். அவருக்கு மாவட்டக் கழகப் பொறுப்பு வழங்கப்பட்டபோது, முதல் பரிசோதனையாக விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதில் மகத்தான வெற்றியைப் பெறுவதற்கான ஒருங்கிணைந்த உழைப்பையும் வியூகத்தையும் முன்னெடுத்தவர் டாக்டர் கௌதம சிகாமணி.** அதன் தொடர்ச்சியாக, தன் தந்தை பொன்முடி போலவே மாவட்டக் கழகத்தை வலிமையோடு வழிநடத்தும் திறன் கொண்டவராகத் திகழ்கிறார்.

விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகையில் இருந்து நிகழ்வு நடைபெறும் இடத்திற்குக் காலையில் நடந்து சென்றபோது, சாலையின் இருபுறமும் மக்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். கோரிக்கை மனுக்களை அளித்தனர். இங்கும் இளைஞர்கள், இளம்பெண்கள், மாணவ – மாணவியர் தங்களின் அன்பான குரலில், 'அப்பா..' என்றழைத்து மகிழ்ந்ததுடன், பலர் செல்ஃபி எடுத்துக்கொண்டனர். நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களின் அன்பைக் கலை வடிவத்தில் வெளிப்படுத்தினர். இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் மத வழக்கப்படி மரியாதை அளித்து, இது எல்லாருக்கும் எல்லாம் தரும் அரசு என்பதை வெளிப்படுத்தினர். கழகத் தொண்டர்கள் வழியெங்கும் திரண்டிருந்து வாழ்த்து முழக்கங்களை எழுப்பினர். அவர்கள்தானே இந்த 75 ஆண்டு கால ஆலமரமான கழகத்தின் ஆணிவேர்கள்!

**திராவிட இயக்கத்தின் ஆணிவேராக இருப்பது சமூகநீதிக் கொள்கையாகும். திராவிடர் சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய மூத்த இயக்கங்களின் வழியில் நூறாண்டு கால சமூகநீதிப் போராட்டத்தை இன்றளவும் தொடர்ந்து உறுதியாகவும் வலிமையாகவும் நடத்திக் கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.** இடஒதுக்கீட்டின் அளவு படிப்படியாக உயர்ந்து, 69 சதவீதம் என்கிற நிலைக்கு வந்ததற்குக் காரணம், நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பிரிவை இந்தியாவிலேயே முதன்முறையாக உருவாக்கி, 20% இடஒதுக்கீட்டை அளித்தவரும் நம் உயிர்நிகர் தலைவர்தான். அ.தி.மு.க. ஆட்சியில் இந்த இடஒதுக்கீட்டுக்காகப் போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அடக்குமுறை ஏவப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சி அமைந்ததும் இடஒதுக்கீடு வழங்கி சமூகநீதி பாதுகாக்கப்பட்டது. **சமூகநீதிப் போராட்டத்தில் அ.தி.மு.க. அரசின் காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்ட 21 போராளிகளின் நினைவைப் போற்றும் வகையில் திராவிட மாடல் ஆட்சியில் கட்டப்பட்டிருக்கும் நினைவரங்கத்தை விழுப்புரத்தில் திறந்துவைத்து, அங்கு அமைக்கப்பட்டிருக்கும் 21 சமூகநீதிப் போராளிகளின் சிலைக்கும் மலர் தூவி, அவர்தம் குடும்பத்தாருக்கும் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.**

திராவிட இயக்க முன்னோடியும், தி.மு.கழகம் தேர்தல் களம் காண்பதற்கு முன்பே பேரறிஞர் அண்ணா தலைமையிலான கழகத்தின் ஆதரவுடன் களம் கண்டவரும், உதயசூரியன் சின்னத்தில் முதன்முதலில் வென்றவருமான முன்னாள் அமைச்சர் ஏ.ஜி. எனப்படும் ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக அவரது முழு திருவுருவச் சிலையுடன் திராவிட மாடல் அரசு அமைத்துள்ள மணிமண்டபத்தையும் திறந்து வைத்தேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேரன்புக்குரிய ஏ.ஜி., அவர்களின் பெருமைகளை இன்றைய தலைமுறை அறிந்துகொண்டு, **திராவிட இயக்கம் குறித்தும் அதன் தலைவர்கள் குறித்தும் அவதூறு பேசியே அரசியல் பிழைப்பு நடத்துவோரைக் கருத்தாயுதத்தால் வீழ்த்தவும் ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவு மணிமண்டபம் செம்மாந்து நிற்கிறது.**

> **திண்டிவனம் புறவழிச்சாலை அருகே அமைந்துள்ள மண்டபத்தில் கழகத்தினரைச் சந்தித்து ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காகச் சென்றபோது, வழியெங்கும் ஆண்களும் பெண்களுமாகப் பொதுமக்கள் திரண்டிருந்தனர். குறிப்பாக, இளைய தலைமுறையினர் அதிகளவில் திரண்டு நின்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்களைக் கண்டதும், காரை விட்டு இறங்கி, அவர்களின் வரவேற்பைப் பெற்றபடியே ஆய்வுக்கூட்டம் நடந்த மண்டபம் வரை நடந்து சென்றேன். இளைஞர்களும், இளம் பெண்களும், மாணவ - மாணவியரும் 'அப்பா.. அப்பா..' என்று அன்பு பொங்க அழைத்தபோது, அவர்களின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட சொற்களைக் கேட்டு மகிழ்ந்தேன்.**

இரு மண்டபங்களையும் திறந்து வைத்தபிறகு, விழுப்புரம் மாவட்டத்திற்கான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று, முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தும் புதிதாக 11 திட்டங்களுக்கான அறிவிப்புகளையும் வெளியிட்டு, ஒன்றிய பா.ஜ.க. அரசால் நிதி நெருக்கடி நீடித்தாலும், அதனையும் எதிர்கொண்டு மக்கள் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்றியே தீருவோம் என்ற உறுதியை வழங்கினேன்.

உங்களில் ஒருவனான என் தலைமையிலான திராவிட மாடல் அரசு மீது தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணம், மக்களின் நலன் காப்பதில் எந்தச் சமரசமும் செய்துகொள்ளாமல் செயல்படுவதுதான். **அரசியல் கண்ணோட்டத்தில் எதிரணியினர் பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், கழக அரசின் சாதனைகளைப் பொறுக்க முடியாமல் புலம்பிக் கொண்டிருந்தாலும், மக்கள் அவர்களைப் புறக்கணித்து தங்கள் நலன் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் பக்கமே நிற்கிறார்கள்.**

**2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலிலும் மக்கள் ஆதரவு நமக்குத்தான் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருக்கிறது. அந்த நம்பிக்கையை நமக்கு வழங்குகின்ற மக்களுக்கு என்றும் துணை நிற்போம். அவர்களின் ஆதரவுடன் ஏழாவது முறையாகத் தி.மு.கழகம் ஆட்சி அமைக்கும் என்ற வெற்றிக்கு அச்சாரமாக விழாக்கோலம் கண்டது விழுப்புரம் மாவட்டம்.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் வெளிப்படும் இந்த நம்பிக்கையின் தொடர்ச்சியாக பிப்ரவரி 6, 7 தேதிகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறேன். அப்போது உடன்பிறப்புகளின் உற்சாக முகங்களை உங்களில் ஒருவனான நான் கண்டு மகிழ்வேன்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056

தை 16

29.01.2025.

---

### ஈரோடு (கி) தொகுதி இடைத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரம்!

## வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம், வேட்பாளர் பெயர்கள் பொருத்தம்!

ஈரோடு, ஜன. 30 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் மற்றும் வேட்பாளர் பெயர்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைந்ததையடுத்து, அத்தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, அந்த தொகுதிக்கு தேர்தல் ஆணையம் இடைத்தேர்தலை அறிவித்தது.

அதன்படி, பிப்ரவரி 5ஆம் தேதி ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் செய்து வருகிறது.

இந்நிலையில், இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள வாக்கு பதிவு இயந்திரங்களில் சின்னம் மற்றும் வேட்பாளர்களின் பெயர்களை பொருத்தும் பணி நேற்று தொடங்கியது. ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் தேர்தல் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் இப்பணி நடைபெற்று வருகிறது.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் 237 வாக்குச்சாவடிகள் உள்ளன. தேர்தலில் 852 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. ஒரு வாக்குப்பதிவு எந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும். கூடுதலாக கடைசியில் நோட்டாவுக்கான பொத்தான் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், நோட்டாவுடன் சேர்த்து 47 பொத்தான்கள் தேவை. எனவே, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 3 வாக்குப் பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. 284 கட்டுப்பாட்டு எந்திரங்கள், 308 விவி பேட் எந்திரங்களும் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளன.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கணியம்பாடி தெற்கு ஒன்றியம் சின்னபாலம்பாக்கம் ஊராட்சி கிராமத்தில் புதிய அங்கன் வாடி மையத்தை மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் என்.கஜேந்திரன், வேலூர் ஒன்றிய செயலாளர் சி.எல். ஞானசேகரன், பகுதி செயலாளர் சி.எம்.தங்கதுரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### ரூ.304 கோடியில் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும் – முதல்வர் அறிவிப்பு!

## விழுப்புரத்தில் விவசாயிகள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்!

**விழுப்புரம், ஜன. 30 -**

**304 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளதை வரவேற்று செஞ்சியில் விவசாயிகள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.**

விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 304 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டம் கீரனூர் அணைக்கட்டில் இருந்து கால்வாய் வெட்டி, துரிஞ்சலாற்றில் வரும் தண்ணீரை திருப்பி திருவண்ணாமலை மாவட்டத்தில் 14 ஏரிகளுக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் 22 ஏரிகளுக்கும் பாசனம் பெறும் வகையில் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் 2 மாவட்டங்களிலும் 6 ஆயிரத்து 598 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை வரவேற்று, செஞ்சியில் நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள், நீர்வள ஆதார அமைப்பு இயக்க நிர்வாகிகள் இணைந்து, கூட்டுச்சாலை பகுதியில் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை விவசாயிகள் தெரிவித்தனர்.



கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தீப்பெட்டித் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான தொழிலாளர்கள், அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து பயன்பெற சிறப்பு முகாமினை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினருக்கான அடையாள அட்டைகள் வழங்கி அமைச்சர் பெ.கீதாஜீவன் துவக்கி வைத்தார். இந்த சிறப்பு முகாமில் மாவட்ட தொ.மு.ச. பேரவை கவுன்சில் செயலாளர் சுசி. ரவீந்திரன், கோவில்பட்டி நகர திமுக செயலாளர் கருணாநிதி, ஒன்றிய திமுக செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன், கருப்பசாமி, மாவட்டத் துணைச் செயலாளர் திருமதி.ஏஞ்சலா, செயற்குழு உறுப்பினர் NRK. ராதாகிருஷ்ணன்,பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.